ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ துக்கச்சுழலையை ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ துக்கச்சுழலையை ॥

திருமாலிருஞ்சோலை எம்பெருமானைப்
போக ஒட்டேன் எனத்தடுத்தல்

‡துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த⋆
வலையை அறப் பறித்து⋆
புக்கினில் புக்குன்னைக் கண்டு கொண்டேன்⋆ இனிப்
போக விடுவதுண்டே⋆
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத⋆
இழந்தவள் தன்வயிற்றில்⋆
சிக்கென வந்து பிறந்து நின்றாய்!⋆ திரு
மாலிருஞ்சோலை எந்தாய்! (1)

வளைத்து வைத்தேன் இனிப் போகலொட்டேன்⋆ உன்றன்
இந்திர ஞாலங்களால்⋆
ஒளித்திடில் நின் திருவாணை கண்டாய்⋆ நீ
ஒருவர்க்கும் மெய்யன் அல்லை⋆
அளித்தெங்கும் நாடும் நகரமும்⋆ தம்முடைத்
தீவினை தீர்க்கலுற்றுத்⋆
தெளித்து வலஞ்செய்யும் தீர்த்தம் உடைத்⋆ திரு
மாலிருஞ்சோலை எந்தாய்! (2)

உனக்குப் பணிசெய்திருக்கும் தவம் உடை
யேன்⋆ இனிப் போய் ஒருவன்
தனக்குப் பணிந்து⋆ கடைத்தலை நிற்கை⋆ நின்
சாயை அழிவு கண்டாய்⋆
புனத்தினை கிள்ளிப் புதுவவி காட்டி⋆ உன்
பொன்னடி வாழ்க என்று⋆
இனக் குறவர் புதியதுண்ணும்⋆ எழில்
மாலிருஞ்சோலை எந்தாய்! (3)

காதம் பலவும் திரிந்துழன்றேற்கு⋆ அங்கோர்
நிழல் இல்லை நீரும் இல்லை⋆ உன்
பாத நிழல் அல்லால் மற்றோர் உயிர்ப்பிடம்⋆
நான் எங்கும் காண்கின்றிலேன்⋆
தூது சென்றாய்! குரு பாண்டவர்க்காய்⋆ அங்கோர்
பொய்ச்சுற்றம் பேசிச் சென்று⋆
பேதம் செய்தெங்கும் பிணம் படைத்தாய்!⋆ திரு
மாலிருஞ்சோலை எந்தாய்! (4)

காலும் எழா கண்ண நீரும் நில்லா⋆ உடல்
சோர்ந்து நடுங்கிக்⋆ குரல்
மேலும் எழா மயிர்க் கூச்சும் அறா⋆ என
தோள்களும் வீழ்வொழியா⋆
மால் உகளாநிற்கும் என் மனனே!⋆ உன்னை
வாழத் தலைப் பெய்திட்டேன்⋆
சேல் உகளாநிற்கும் நீள்சுனை சூழ்⋆ திரு
மாலிருஞ்சோலை எந்தாய்! (5)

எருத்துக் கொடி உடையானும்⋆ பிரமனும்
இந்திரனும்⋆ மற்றும்
ஒருத்தரும் இப் பிறவி என்னும் நோய்க்கு⋆
மருந்தறிவாரும் இல்லை⋆
மருத்துவனாய் நின்ற மா மணிவண்ணா!⋆
மறு பிறவி தவிரத்
திருத்தி⋆ உன் கோயில் கடைப் புகப் பெய்⋆ திரு
மாலிருஞ்சோலை எந்தாய்! (6)

அக்கரை என்னும் அனத்தக் கடலுள்
அழுந்தி⋆ உன் பேர் அருளால்⋆
இக்கரை ஏறி இளைத் திருந்தேனை⋆ அஞ்-
சல் என்று கை கவியாய்⋆
சக்கரமும் தடக்கைகளும்⋆ கண்களும்
பீதக ஆடையொடும்⋆

செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்!⋆ திரு
 மாலிருஞ்சோலை எந்தாய்! (7)

எத்தனை காலமும் எத்தனை ஊழியும்⋆
 இன்றொடு நாளை என்றே⋆
இத்தனை காலமும் போய்க் கிறிப் பட்டேன்⋆
 இனி உன்னைப் போகலொட்டேன்⋆
மைத்துனன் மார்களை வாழ்வித்து⋆ மாற்றலர்
 நூற்றுவரைக் கெடுத்தாய்!⋆
சித்தம் நின்பாலதறிதி அன்றே⋆ திரு
 மாலிருஞ்சோலை எந்தாய்! (8)

அன்று வயிற்றில் கிடந்திருந்தே⋆ அடி-
 மை செய்யல் உற்றிருப்பன்⋆
இன்று வந்திங்குன்னைக் கண்டு கொண்டேன்⋆
 இனிப் போக விடுவதுண்டே⋆
சென்றங்கு வாணனை ஆயிரந்தோளும்⋆
 திருச் சக்கரம் அதனால்⋆
தென்றித் திசை திசை வீழச் செற்றாய்!⋆ திரு
 மாலிருஞ்சோலை எந்தாய்! (9)

‡சென்றுலகம் குடைந்தாடும் சுனைத்⋆ திரு
 மாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான்⋆ அடிமேல் அடிமைத் திறம்⋆
 நேர்பட விண்ணப்பஞ்செய்⋆
பொன் திகழ் மாடம் பொலிந்து தோன்றும்⋆ புது-
 வைக்கோன் விட்டுசித்தன்⋆
ஒன்றினோடொன்பதும் பாட வல்லார்⋆ உல-
 கம் அளந்தான் தமரே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥